(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(13).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 யூன் 27 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 யூலை 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்,— 2022 மார்ச் மாதத்தில், அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியை கண்டிருந்தமையால், இலங்கை கடுமையான நிலையான படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தமையாலும் இதன் விளைவாக, இலங்கை நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில், பொருளாதார நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியிருந்தமையினாலும்;

இந்த கடுமையான பிரச்சினை பற்றி பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) கடனை மறுசீரமைப்பதற்கும், நெருக்கடிக்கு தீர்வைவொன்றைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தமையினால் அக்கறை தாரர்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிதி ஆலோசகர் லஸார்ட் (Lazard) மற்றும் சட்ட ஆலோசகர் க்ளிஃப்பர்ட் சான்ஸ் எல்எல்பீ (Clifford Chance LLP) ஆகியோர்களை நியமித்திருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியமானது (IMF), இலங்கையின் நிதியியல் நிலைமை பற்றிய விரிவான மீளாய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரையறுத்து நிலையான படுகடன் பற்றிய மதிப்பீடொன்றை வெளியிட்டிருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கமைவாக, கடுமையான கடன் மறுசீரமைப்பு நடைமுறை பின்னர் இலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினாலும்;

இருதரப்பு கடன்வழங்குநர் மீள்கொடுப்பனவுகளையும், இறையாண்மை பிணை உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் படுகடன் திருப்பிச் செலுத்தல்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், பலதரப்பு படுகடன் கொடுப்பனவு களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தமையினாலும்;

2023 யூன் 28 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, பொதுப்படுகடனைச் செலுத்துவதில் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு படுகடன் உகந்தநிலைக்கு ஆக்கப்படுதல் வேண்டும் என்று பாராளுமன்றம் தீர்மானித்திருந்தமையினாலும்;

உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது, சர்வதேச நாணய நிதியத்தின், நிலையான படுகடனைச் செலுத்துகின்ற மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையால் நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையினால், இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களின் எஞ்சிய இரண்டு பிரிவுகள் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் இறையாண்மை பிணை உரிமையாளர் களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின்  நிலையான படுகடன் அளபுருக்களுக்கேற்ப இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதற்காக, பிரான்ஸ், யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்று (OCC) அமைக்கப்பட்டிருந்தமையினாலும், அதேவேளை, இலங்கையானது சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவாக அதே அளபுருக்களுக்குள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமையினாலும்;

எதிர்காலத்தில் சாத்தியமான நேர்மறையான கடன் மீளாய்வுகளுக்கு வழிவகுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழு (OCC) மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றிகரமான முடிவை கோடிட்டுக் காட்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2024 யூன் 26 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தமையினாலும்;

சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகுகையை இலகுபடுத்தவுள்ள இந்த மூலோபாய மற்றும் அளபுரு அணுகுமுறையின் விளைவாக செம்மைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்களை அடைவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றமையினாலும்;

அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறித்துகாட்டி, இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC), 2024 யூன் 26 ஆம் திகதி பரிஸில் படுகடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்ததுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவை பெய்ஜிங்கில் கடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்தன. இந்த உடன்படிக்கைகள், இலங்கையானது, கடன் வழங்கும் நாடுகளுடன் புதிய ஈடுபாட்டுடன் அதன் இருதரப்பு பொருளாதார உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கின்றமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையாக படுடைனைச் செலுத்துதல் பற்றிய பகுப்பாய்வுடன் ஒத்துப்போகும் வகையில் படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள், படுகடனை நிலையாகச் செலுத்துவதனை மீள அடைவதற்கு கருவியாக அமைந்துள்ளன. மேலும், அவை விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவி, நிலையான வளர்ச்சியைப் பேணி இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு மாற்றியமைப்பதற்கும் தயாராகவுள்ளன.

ஆகவே, 2024.06.26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வரும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் படுகடன் மறுசீரமைப்பு மீதான உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட இறுதி உடன்படிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் (EXIM Bank) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கான இறுதித் திருத்த உடன்படிக்கை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.